பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 02 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுதந்திர இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் மறைந்த ராஜகோபாலாச்சாரியாரின் நினைவாக ராஜாஜி உற்சவம் இன்று கொண்டாடப்படுகிறது.

2. மகளிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மேற்குவங்கத்தில் பிஜேபி அரசு அமைவதற்கு அம்மாநில மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ன தேவி கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மணிப்பூரில் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

4. ஆஃப்கனிஸ்தான் மீது பாகிஸ்தான் விமானப்படை நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

5. ஈரான் - அமெரிக்கா இடையே அணுசக்தி திட்டங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 26ஆம் தேதி நடைபெற உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுதந்திர இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் மறைந்த ராஜகோபாலாச்சாரியாரின் நினைவாக ராஜாஜி உற்சவம் இன்று கொண்டாடப்படுகிறது.

அதிகாரம் மக்களுக்கான சேவையாக இருக்க வேண்டும் என்ற ராஜாஜியின் சிந்தனைகளை போற்றும் வகையில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் ஆங்கிலேய வடிவமைப்பாளரால் நிறுவப்பட்ட அவரது சிலைக்கு மாற்றாக புதிய திருவுருவச் சிலை நிறுவப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அவரது அளப்பரிய சேவைக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் 1954ஆம் ஆண்டு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவின் ஒரு பகுதியாக ராஜாஜி குறித்த கண்காட்சி இம்மாதம் 24ஆம் தேதி முதல் மார்ச் ஒன்றாம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

மகளிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மேற்குவங்கத்தில் பிஜேபி அரசு அமைவதற்கு அம்மாநில மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சரும் அக்கசியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திருமதி அன்னபூர்ன தேவி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இம்மாநிலத்தில் மகளிருக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது என்று கூறினார்.

மத்திய அரசின் நலத்திட்டங்களை அம்மாநில அரசு செயல்படுத்த தவறிவிட்டதாக அவர் குறை கூறினார்.

குற்றச் செயல்களில் ஈபடுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் மாநில அரசு அவர்களைப் பாதுகாத்து வருவதாக திருமதி அன்னபூர்ணா தேவி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தொலைதூரப் பகுதிகளில் தகவல் தொடர்பு சேவைகளுக்கு கிராமப்புற அஞ்சலகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் குண்டூரில் நடைபெற்ற கிராமப்புற அஞ்சலக சேவை தொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாடு முழுவதிலும் 6 புள்ளி 3 லட்சம் கிராமங்களில் அஞ்சலக சேவைகள் செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

மழை, கடும் வெப்பம், சூறாவளி போன்ற பல்வேறு இயற்கை பேரிடர் காலங்களிலும் கிராப்புற அஞ்சலகங்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள அஞ்சலகங்களில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருவதாகவும் அவர்கள் அரசுக்கும், மக்களுக்கும் இடையே பாலமாக செயல்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அஞ்சலகங்களில் 38 கோடிக்கும் அதிகமான சேமிப்புக் கணக்குகளில் 22 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு வைப்புத்தொகை உள்ளதாக திரு. ஜோதில் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<>>>>

உடல் உறுப்பு தானம் மற்றும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் உடலுறுப்பு அறுவை சிகிச்சைகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நான்கு அடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் 18 சதவீதம் உயிரிழந்தவர்களிடம் இருந்து தானமாக பெறப்பட்ட உறுப்புகளைக் கொண்டு நடத்தப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இதயம், நுழையீரல், கணையம் போன்ற சிக்கலான உடறலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா சாதனை படைத்து வருவதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உடலுறுப்பு தானம் செய்வதற்கான அவசியம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் சுட்டிக்காட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

மணிப்பூரில் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

இதுகுறித்து இம்பாலில் செய்தியாளர்களிடம் பேசிய மணிப்பூர் இடைநிலைக் கல்வி வாரியத்தின் செயலாளர், 36 ஆயிரத்து 726

மாணவ-மாணவிகள் இந்த பொதுத்தேர்வை எழுதவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் பொதுத் தேர்வு மார்ச் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக மாநிலம் முழுவதும் 161 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்வை கண்காணிப்பதற்காக 36 சோதனைக் குழுக்களும், 12 சிறப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் மாணவ-மாணவியருக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. யும்நம் கேம்சந்த் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தான் மீது பாகிஸ்தான் விமானப்படை நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இஸ்லாமியர்களின் புனித மாதமான ரமலான் மாதத்தில் பெண்கள்

மற்றும் குழந்தைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மனிதாபிமானமற்ற செயல் என்று குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் அரசின் உள்நாட்டு விவகாரங்களில் ஏற்பட்டுள்ள தோல்விகளை மறைப்பதற்காகவே இதுபோன்ற தாக்குதல் நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆஃப்கனிஸ்தான் நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்த தாக்குதல் சம்பவம் குறித்து பாகிஸ்தான் தூதரிடம் ஆஃப்கனிஸ்தான் அரசு கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.

**Nangarhar** மற்றும் **Paktika** மாகாணங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த வான்வழித் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்துள்ளதாக ஆஃப்கன் அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளை மத்திய துறைமுகங்கள்

மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்னானந்த சோனோவால் இன்று தொடங்கி வைக்கிறார்.

தூத்துக்குடி துறைமுகத்தில் 5 மெகாவாட் காற்றாலை மின்உற்பத்தி நிலையம் உட்பட பல்வேறு திட்டங்களுக்கும் அமைச்சர் அடிக்கல் நாட்ட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜார்க்கண்டில் 48 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

சற்றுமுன் தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த உள்ளாட்சித் தேர்தலில் 43 லட்சத்து 43 ஆயிரம் தகுதியுடைய வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

9 நகராட்சிகள், 20 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் 19 பஞ்சாயத்துகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதற்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களின் உணவுப் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் வகையில் நாகாலாந்து மாநிலத்தில் முதல் முறையாக அரிசித் திருவிழா நடைபெற உள்ளது.

இம்மாதம் **26** மற்றும் **27**ஆம் தேதிகளில் நடைபெறும் இத்திருவிழாவின் ஒருபகுதியாக வேளாண் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாரம்பரிய அரிசி வகைகள், வேளாண் கருவிகள், விதைப் பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் இத்திருவிழா நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜிம்பாப்வேயில் **HIV** தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை அந்நாட்டு அரசு செயல்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளது.

கடந்த **20** ஆண்டுகளில் இந்த தொற்று காரணமாக **10** ஆயிரத்துக்கம் அதிகமானோர் உயிரிழந்ததையடுத்து அந்நாட்டு அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆண்டுக்கு இரு முறை செலுத்தப்படும் இந்த தடுப்பூசி அதிக பாதிப்புக்குள்ளான **46** ஆயிரத்து **500** பேருக்கு முதற்கட்டமாக செலுத்தப்பட உள்ளது.

இளம் பெண்கள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் பெண்கள் போன்ற அதிக பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு இந்த தடுப்பூசி கட்டணமின்றி செலுத்தப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஈரான் - அமெரிக்கா இடையே அணுசக்தி திட்டங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் இம்மாதம் **26**ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஓமன் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் இந்தப் பேச்சுவார்தையில் ஈரானின் அணுசக்தி திட்டங்கள் குறித்த விவாதங்கள் மட்டுமே இடம்பெறும் என்று ஓமன் வெளியுறவு அமைச்சர் திரு. **Badr Ali Busaidi** தெரிவித்துள்ளார்.

ஈரானில் நடைபெற்று வரும் மாணவர்கள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வரும் சூழலில் தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஆகாஷ் பால் - ஆஸ்திரேலியாவின் **Minhyung Jee** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவில் இந்த இணை, சிலியின் **Gomez - Ortega** இணையை வென்றது.

------------

மாற்றுத்திறனாளிகள் தேசிய கிரிக்கெட் போட்டி மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் நேற்று தொடங்கியது.

இப்போட்டியை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தொடங்கி வைத்தார்.

இப்போட்டியில் **25** மாநிலங்களைச் சேர்ந்த **350** மாற்றுத்திறனாளி வீரர்கள் தொடர்ந்து **100** மணி நேரம் விளையாடி சாதனை படைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

--------------

ஜம்மு-கஷ்மீர் தோடா மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான ஃபைபர் படகுப் போட்டியில் எல்லைப் பாதுகாப்புப் படையின் ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் சாம்பியன் பட்டம் வென்றன.

**<<<<The End>>>>**